வெற்றிவேற்கை

மூலமும் உரையும்

வேண்டிய புஸ்தகம் கிடைக்கும்
ஆனந்தா புஸ்தகசாலை
221, K. K. S ரோட்டு, யாழ்ப்பாணம்

விலை அணா 4

சரஸ்வதி புத்தகசாலை.
175. செட்டியார் தெரு கொழும்பு

M. S. Ezechiel B.O.M. ...
Teacher
1957.

உ

வெற்றி வேற்கை

மூலமும் - உரையும்

கடவுள் வாழ்த்து

**பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதுமலர் தலைக்கணி வோமே.**

(பதவுரை) பிரணவப் பொருளாம்-பிரணவ மந்திரப் பொருளாகிய, பெருந்தகை-பெருந்தன்மையையுடைய, ஐங்கரன்-ஐந்து கரங்களையுடைய விநாயகப் பெருமானின், சரணம்-திருவடிகளாகிய, அற்புதமலர்-அழகிய செந்தாமரை மலரை, தலைக்கு அணிவோம்-தலையில் அலங்காரமாகச் சூடிக்கொள்வோம்.

(கருத்து) பிரணவ மந்திரப் பொருளாகிய விநாயகப் பெருமான் திருவடிகளை வணங்குவோம்.

நூற்பயன்

**வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.**

(பத.) கொற்கை-கொற்கை என்னும் நகரை, ஆளி-ஆள் பவனுகியும், குலம்-பாண்டிய குலத்திற்கே, சேகரன்-முடிபோன்றவனுகியும் (விளங்குகின்ற), வெற்றி-வெற்றியைத் தரும், வேல்-வேலை ஏந்திய, கை-கையையுடைய, வீரராமன்-அதிவீரராம பாண்டியன், புகல் - சொன்ன, நல்-

நல்ல, தமிழ்-தமிழிலே, தெரிந்த-ஆராய்ந் தெடுத்த, நறுந் தொகை தன்னால்-நறுந்தொகையாகிய இந்நீதிநூலால், குற் றங்-குற்றத்தை, களைவோர்-போக்கிக் கொள்வோர், குறைவு-தாழ்வு, இல்லாதவர்-இல்லாதவராவர்.

(கரு.) அதிவீரராம பாண்டியன் செய்த நறுந்தொகை யைப் படித்துக் குற்றங்களை நீக்கிக் கொள்பவர் ஒரு குறை வும் இல்லாதவர்.

நூல்

1 எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்

(பத.) எழுத்து-எழுத்துக்களை, அறிவித்தவன்-கற்பித் தவன், இறைவன்-கடவுள், ஆகும்-ஆவான்.

(கரு.) கல்வி கற்றுக்கொடுத்த ஆசிரியன் கடவுளுக்குச் சமானம்.

2 கல்விக் கழகு கசடற மொழிதல்

(பத.) கல்விக்கு-படிப்புக்கு, அழகு-அழகாவது, கசடு-குற்றமும், அற-நீங்க, மொழிதல்-சொல்லுதல்.

(கரு.) படித்தற்கு அழகு செவ்வையாய்ப் பேசுதல்.

3 செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்

(பத.) செல்வர்க்கு-செல்வம் உடையவர்க்கு, அழகு-அழகாவது, செழுங்கிளை-நெருங்கிய சுற்றத்தாரை, தாங்கு தல்-காப்பாற்றுதல்.

(கரு.) பணக்காரர்களுக்கு அழகு அவரவர் சுற்றத் தாரைக் காப்பாற்றுதல்.

4 வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்

(பத.) வேதியருக்கு-அந்தணருக்கு அழகு - அழ கானது, வேதமும்-வேதம் ஓதுதலும், ஒழுக்கமும்-நல்ல நடையுமாம்.

(கரு.) பிராமணருக்கு அழகு, வேதம் ஓதுதலும், ஒழுக்கம் உடையவர்களாயிருத்தலும்.

5 மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை

(பத.) மன்னவர்க்கு-அரசருக்கு, அழகு-அழகாவது, செங்கோல்-செங்கோலினது, முறைமை-கிரமமாம்.

(கரு.) அரசருக்கு அழகு செங்கோல் கோடாமல் நீதி செலுத்தல்.

6 வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்

(பத.) வணிகர்க்கு-வியாபாரிக்கு, அழகு-அழகாவது, வளர்-வளர்கின்ற, பொருள்-திரவியத்தை, ஈட்டல்-சம்பாதித்தல்.

(கரு.) வியாபாரிக்கு அழகு பணத்தை அதிகமாகச் சம்பாதித்தல்.

7 உழவர்க் கழகே ருழுதூண் விரும்பல்

(பத.) உழவர்க்கு-உழுது பயிரிடுபவர்களுக்கு, அழகு-அழகாவது, ஏர் உழுது-ஏருழுது பயிர் செய்து, ஊண்-(அதனால் வரும்) உண்வை உண்டிருப்பதற்கு, விரும்பல்-ஆசைப்படுதல்.

(கரு.) உழவர்களுக்கு அழகு பயிரிட்டு வாழ ஆசைப்படுதல்.

8 மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்

(பத.) மந்திரி-அமைச்சனுக்கு, அழகு-அழகாவது. வரும்பொருள்-இனி வருங் காரியத்தை, உரைத்தல்-(தெரிந்து) சொல்லுதல்.

(கரு.) மந்திரிக்கு அழகு பின்னால் வரப்போவதை முன்னே தெரிவித்தல்.

9 தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை

(பத.) தந்திரிக்கு-படைத்தலைவனுக்கு, அழகு-அழகாவன, தறுகண்-அஞ்சாமையும், ஆண்மை-வீரமும்.

(கரு.) படைத்தலைவனுக்கு அழகு பயப்படாமையும் வீரமும்.

10 உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்

(பத) உண்டிக்கு-உணவுக்கு, அழகு - அழகாவது, விருந்தோடு-விருந்தினருடன் இருந்து, உண்டல்-சாப்பிடுதல்.

(கரு.) உணவு எடுத்தலுக் கழகு வந்த விருந்தினருடன் சாப்பிடுதல்,

11 பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்

(பத.) பெண்டிர்க்கு-பெண்களுக்கு, அழகு - அழகாவது, எதிர்-(கணவருக்கு) எதிராக, பேசாது-பேசாமல், இருத்தல்-அடங்கி யிருத்தல்.

(கரு.) கணவரை எதிர்த்துப் பேசாதிருத்தலே பெண்களுக்கு அழகு.

12 குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்

(பத.) குலமகட்கு - நல்ல குலத்தில் பிறந்த பெண்ணுக்கு, அழகு-அழகாவது, தன்-தன்னுடைய, கொழுநனை-கணவனை, பேணுதல்-வழிபடுதல்.

(கரு.) தன்னுடைய நாயகனை வழிபடுதலே நல்ல குடிப் பிறந்த பெண்ணுக்கு அழகு.

13 விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்

(பத.) விலைமகட்கு-வேசிக்கு, அழகு-அழகாவது, தன் மேனி-தன் உடம்பை, மினுக்குதல்-(துணி மணிகளினாலே) அழகு படுத்தல்.

(கரு.) தனது உடம்பை அலங்கரித்துக் கொள்வது வேசிக்கு அழகு.

14 அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்

(பத.) அறிஞர்க்கு-அறிவுடையோருக்கு, அழகு-அழகாவது, கற்று-வாசித்து, உணர்ந்து-தெளிந்து, அடங்கல்-(அதன்படி) அடங்கியிருத்தல்.

(கரு.) நல்ல நூல்களைக் கற்றுத் தெளிந்து, அடங்கியிருத்தல் அறிவுடையோர்க்கு அழகு.

15 வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை

(பத.) வறிஞர்க்கு-வறியோருக்கு, அழகு-அழகாவது, வறுமையில்-தரித்திர காலத்திலும், செம்மை-ஒழுக்கம் கெடாமலிருத்தல்.

(கரு.) வறுமை வந்த காலத்தும் ஒழுக்கமாய் இருப்பதே தரித்திரருக்கு அழகு.

16 தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே

(பத.) தேம்படு-இனிமை பொருந்திய, பனையின்-பனைமாத்தின், திரள்-திரண்ட, பழத்து-பழத்தினது, ஒரு விதை ஒரு விதையானது, வான்-ஆகாயத்தை, உற-பொருந்தும்படி, ஓங்கி-உயர்ந்து, வளம்-செழுமை, பெற-உண்டாக, வளரினும்-வளர்ந்தாலும், ஒருவர்க்கு-ஒருவருக்கு, இருக்க-இருப்பதற்கு, நிழலாகாது-நிழலைக்கொடாது.

(கரு.) பனம் பழத்தின் விதையிலிருந்து தோன்றிய மரம் உயரமாக வளர்ந்தபோதிலும் ஒருவர் தங்குவதற்குக் கூட நிழலைத் தராது.

17 தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெள்நீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையோடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

(பத.) தெள்ளிய-தெளிந்த, ஆலின்-ஆலமரத்தினது, சிறு-சிறிய, பழத்து-பழத்திலுள்ள, ஒரு விதை-ஒரு விதையானது, தெள்-தெளிந்த, நீர்-நீரினையுடைய, கயத்துள்-குளத்திலுள்ள, சிறு மீன்-சிறிய மீனின், சினையினும்-முட்டையினும், நுண்ணிதே-சிறியதே, ஆயினும்-ஆனாலும், அண்ணல்-பெருமை பொருந்திய, யானை-யானையும், அணி-அழகிய, தேர்-தேரும், புரவி-குதிரையும், ஆள்-காலாள்களும் (ஆகிய), பெரும்-பெரிய, படையொடு-சேனையோடு, மன்னர்க்கு-அரசருக்கு, இருக்க-தங்கி இருப்பதற்கு, நிழலாகும்-நிழலைத் தரும்.

(கரு.) ஆலம் விதை சிறிய ஒரு மீன் முட்டையை விடச் சிறியதா யிருந்தாலும் மன்னர்தம் சேனையுடன் தங்குதற்குரிய நிழலைத் தரும்.

18 பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்

(பத.) பெரியோர்-(உருவத்தில்) பெரியவர், எல்லாம்-எல்லாரும், பெரியரும்-பெரியவரும், அல்லர் - ஆகார், சிறியோர்-(உருவத்தில்) சிறியவர், எல்லாம்-எல்லாரும், சிறியரும்-சிறியவரும், அல்லர்-ஆகார்.

(கரு.) உருவத்தைப் பார்த்து ஒருவரைப் பெரியவர் சிறியவரென்று சொல்ல முடியாது.

19 பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்

(பத,) பெற்றோர் எல்லாம்-பெற்ற பிள்ளைகளெல்லாரும், பிள்ளைகள் அல்லர்-பிள்ளைகளாகார், உற்றோர் எல்லாம்-உறவின ரெல்லாம், உறவினர் அல்லர்-சுற்றத்தார்களாகார், கொண்டோர் எல்லாம்-மணஞ் செய்துகொண்ட மனைவியரெல்லாம், பெண்டிரும் அல்லர்-மனைவியரும் ஆகார்.

(கரு.) ஒருவருக்குப் பிறந்த பிள்ளைகளெல்லாம் நல்ல பிள்ளைகளாகவும் ஒருவருடைய சுற்றத்தார் எல்லாரும் நல்ல பந்துக்களாகவும், மணஞ் செய்துகொண்ட மனைவியரெல்லாம் நல்ல மனைவியாகவும் இருப்பது அருமை.

20 அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறு காது

(பத.) ஆவின்பால்-பசுவின் பால், அடினும்-காய்ச்சினாலும், தன் சுவை-தன்னுடைய மதுரத்தில், குன்றாது-குறையாது; செம்பொன்-செம்மையான தங்கமானது, சுடினும்-சுட்டாலும், தன் ஒளி-தன்னுடைய ஒளியில், கெடாது-குன்றாது; சந்தனம்-சந்தனக் கட்டையானது, அரைக்கினும்-தேய்த்தாலும், தன் மணம்-தன்னுடைய வாசனையில், அறாது-நீங்காது; கார் அகில்-கரிய அகிற் கட்டையானது, புகைக்கினும்-புகையச்செய்தாலும், பொல்லாங்கு-துர்நாற்றத்தை, கமழாது-வீசாது; தண்கடல்-குளிர்ச்சி

பொருந்திய கடலானது, கலக்கினும்-கலக்கினாலும், சேறு காது-சேறு ஆக மாட்டாது.

(கரு.) பாலை வற்றக் காய்ச்சினாலும் அது சுவையில் குறையாது; தங்கத்தைச் சுட்டாலும் அது ஒளியிற் கெடாது; சந்தனக்கட்டையை அரைத்தாலும் அது தன் மணத்திற் குறையாது; அகிற்கட்டையைப் புகையச்செய் தாலும் அது துர்நாற்றம் வீசாது; கடலைக் கலக்கின காலத் தும் அது சேறாகாது.

21 அடினும்பால் பெய்துகைப்
பறாதுபேய்ச் சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது

(பத.) பேய்ச் சுரைக்காய்-பேய்ச் சுரைக்காயை, பால் பெய்து-பால் விட்டு, அடினும்-சமைத்தாலும், கைப்பறாது-(அதன்) கசப்பு நீங்காது; உள்ளி-உள்ளிப் பூண்டிற்கு, பல் விரை-பல வாசனைகளை, ஊட்டினும்-ஊட்டினாலும், கமழாது-நல்ல மணம் வீசாது.

(கரு.) பால் விட்டுச் சமைத்தாலும் பேய்ச் சுரைக்கா யின் கசப்புப் போகாது; வாசனைகளை ஊட்டினபோதிலும் உள்ளிப்பூண்டு நல்ல வாசனையை வீசாது.

22 ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே

(பத.) ஒருநாள்-ஒருநாள், பழகினும்-பழகினாலும், பெரியோர்-சிறந்த குணமுடையோருடைய, கேண்மை-சிநேகமானது, இருநிலம்-பெரிய பூமியானது, பிளக்க-வெடிக்க, வேர்-வேரை, வீழ்க்கும்-ஊன்றும்.

(கரு.) மேன்மக்களுடன் ஒரு நாட்பழகினும் அந் நட்பு உறுதியாயிருக்கும்.

23 நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே

(பத.) நூறு ஆண்டு-நூறு வருஷம், பழகினும்-பழகி னலும், மூர்க்கர்-கீழ்மக்களுடைய, கேண்மை-சிநேக மானது, நீர்க்குள்-தண்ணீரிலுள்ள, பாசிபோல் - பாசியைப் போல, வேர்-வேரை, கொள்ளாது-ஊன்றாது.

(கரு) மூர்க்கருடன் பலநாட் பழகினும் அந்நட்பு உறுதியாய் இராது.

24 பெருமையும் சிறுமையும் தான்தர வருமே

(பத.) பெருமையும்-உயர்வும், சிறுமையும்-தாழ்வும், தான் தர-தான்செய்து கொள்ளுதலால், வரும்-உண்டா கும்.

(கரு.) ஒருவர்க்கு உயர்வுந் தாழ்வும் அவர் தம் செய் கையால் உண்டாகும்.

25 சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே

(பத.) சிறியோர்-கீழ்மக்கள், செய்த - செய்த, சிறு பிழை-சிறிய குற்றம், எல்லாம்-யாவற்றையும், பெரியோரா யின்-உயர்ந்தோரானல், பொறுப்பது-பொறுத்திருப்பது, கடனே-கடமையாம்.

(கரு) சிறியவர் செய்த சிறு குற்றங்களைப் பொறுத் துக் கொள்வது கடமை.

26 சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே

(பத,) சிறியோர்-கீழ்மக்கள், பெரும்பிழை-பெரிய குற் றங்களை, செய்தனராயின்-செய்தாரே யானல், பெரியோர்- உயர்ந்தோர், அப்பிழை-அந்தக் குற்றத்தை, பொறுத்தலும்- பொறுத்துக் கொள்வதும், அரிது-அருமை.

(கரு.) சிறியவர் பெருங் குற்றஞ் செய்தால் பெரியோர் அதைப் பொறுத்துக் கொள்வது அருமையாம்.

27 கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

(பத.) கற்கை - கற்றல், நன்றே-நல்லதே, கற்கை-கற்றல், நன்றே-நல்லதே, பிச்சை-பிச்சை யெடுக்க, புகினும்-போனாலும், கற்கை-நூல்களைக் கற்றல், நன்றே-நல்லதே.

(கரு.) பிச்சை யெடுத்தாவது கல்வி கற்க வேண்டும்.

28 கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே

(பத.) கல்லா-படியாத, ஒருவன்-ஒருவன், குலநலம்-தன் குலத்தின் சிறப்பை, பேசுதல் - சொல்லுதல், நெல்லினுள்-நெற்பயிரினிடத்து, பிறந்த-உண்டான, பதராகும்-பதருக்கு ஒப்பாகும், ஏ-அசை.

(கரு.) படியாத ஒருவன் தன் பிறப்பின் உயர்வைப் பற்றிப் பேசுதல் பயனற்றதாகும்.

29 நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே

(பத.) நாற்பால்-நான்கு வகைப்பட்ட, குலத்தில்-குலங்களில், மேற்பால்-மேலான குலத்தில் பிறந்த, ஒருவன்-ஒருத்தன், கற்றிலன் ஆயின்-கல்லாதவனாயின், கீழ் இருப்பவனே-தாழ்ந்த இடத்தில் இருக்கத்தக்கவனே.

(கரு.) உயர் குலத்திற் பிறந்தபோதிலும் கல்லாதவன் கீழாக மதிக்கப்படுவான்.

30 எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியில் கற்றோரை மேல்வரு கென்பர்

(பத.) எ-எந்த, குடி-குலத்தில், பிறப்பினும் - பிறந்தாலும், யாவரே யாயினும்-யாராயிருந்தாலும், அ-அந்த, குடியில்-குலத்தில், கற்றோரை-படித்தவரை, மேல்-மேலிடத்திற்கு, வருக-வரவேண்டும், என்பர்-என்று அழைப்பார்கள்.

(கரு.) எந்தக் குலத்தில் பிறந்தவரானாலும் படித்தவராயிருந்தால் அவரை யாவரும் மதிப்பர்.

31 அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்

(பத.) அறிவுடைய-கல்வி யறிவுடைய, ஒருவனை-ஒருவனை, அரசனும்-அரசன் கூட, விரும்பும்-விரும்புவான்.

(கரு.) அறிவுள்ளவனை அரசனும் விரும்புவான்.

32 அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே

(பத.) அச்சம் - பயத்தை, உள்ளடக்கி - உள்ளே வைத்து, அறிவு-விவேகம், அகத்து இல்லா-மனத்தில் இல்லாத, கொச்சை மக்களை-இழிவான பிள்ளைகளை, பெறுதலின்-பெறுவதைப் பார்க்கிலும், அக்குடி-அந்தக் குலம், எச்சம் அற்று-சந்ததி இல்லாமல், ஏமாந்து-ஏங்கி, இருக்கை-இருத்தல், நன்று-நல்லது, ஏ-அசை.

(கரு.) அறிவில்லாத பிள்ளைகளைப் பெறுவதைவிட அக்குடி சந்ததி இல்லாதிருத்தல் நல்லது.

33 யானைக் கில்லை தானமும் தருமமும்

(பத.) யானைக்கு-யானைக்கு, தானமும்-கொடுத்தலும், தருமமும்-தருமம் செய்தலும், இல்லை-இல்லை.

(கரு.) யானைக்குக் கை நீண்டிருந்தும் அதற்குத் தானமும் தருமமும் கிடையாது.

34 பூனைக் கில்லை தவமுந் தயையும்

(பத.) பூனைக்கு-பூனைக்கு, தவமும்-நோன்பும், தயையும்-இரக்கமும், இல்லை-இல்லையாம்.

(கரு.) பூனை கண்ணை மூடிக்கொண்டு இருந்தாலும் அதற்கு விரதமும் தயையும் இல்லை.

35 ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்

(பத.) ஞானிக்கு-ஞானிகளுக்கு, இன்பமும்-சுகமும், துன்பமும்-துக்கமும், இல்லை-இல்லையாம்.

(கரு.) உலகத்துடன் கலந்து இன்ப துன்பங்களை அனுபவிப்பவன்போலக் காட்டினாலும் உண்மையான ஞானிக்கு இரண்டிலும் பற்றில்லை.

36 சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்

(பத.) சிதலைக்கு-செல்லுக்கு, செல்வமும்-பொருளுடைய ரென்பதும், செருக்கும்-செருக்குடைய ரென்பதும், இல்லை-இல்லையாம்.

(கரு.) கறையான் அரித்துவிடுவதில் வித்தியாசங் காட்டாது.

37 முதலைக் கில்லை நீத்தும் நிலையும்

(பத.) முதலைக்கு-முதலைக்கு, நீத்தும்-நீந்தித் திரியத்தக்க ஆழமுடைய நீர் என்பதும், நிலையும்-நீந்தாது திரியத்தக்க ஆழமுடைய நீர் என்பதும், இல்லை-இயற்கையாக, இல்லை.

(கரு.) முதலை தண்ணீரில் எவ்விடத்திற்கு வேண்டுமானாலும் போகும்.

38 அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை

(பத.) அச்சமும்-பயப்படுதலும், நாணமும்-வெட்கப் படுதலும், அறிவு-விவேகம், இலோர்க்கு-இல்லாதவர் களுக்கு, இல்லை-இல்லையாம்.

(கரு.) அறிவில்லாதவர்க்குப் பயமும் வெட்கமும் கிடையாது.

39 நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை

(பத.) நாளும்-நட்சத்திரமும், கிழமையும்-வாரமும், நலிந்தோர்க்கு-வறுமையால் நொந்தவர்க்கு, இல்லை-இல்லை யாம்.

(கரு.) ஏழைகளுக்கு நாளும், கிழமையும் இல்லை.

40 கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை

(பத.) கேளும்-நட்பினரும், கிளையும்-உறவினரும், கெட்டோர்க்கு-வறுமையடைந்தவருக்கு, இல்லை-இல்லை யாம்.

(கரு.) தமது நிலையிலிருந்து தவறினவருக்கு நட்பும் சுற்றமும் இல்லை.

41 உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா

(பத.) உடைமையும்-செல்வமும், வறுமையும்-தரித் திரமும், ஒருவழி-ஓரிடத்திலே, நில்லா-நிற்கமாட்டா.

(கரு.) செல்வமும் தரித்திரமும் ஒரே இடத்தில் நிலைத்திரா.

**42 குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்[வர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணு**

(பத.) குடை-வெண்கொற்றக் குடையின், நிழல்-நிழ லில், இருந்து-இருந்து, குஞ்சரம்-யானையை, ஊர்ந்தோர்-

நடத்திய அரசர், நடைமெலிந்து-நடை தளர்ந்து, ஓர் ஊர்-ஒரு தேசத்தை, நண்ணினும்-அடைந்தாலும், நண்ணுவர்-அடைவர்.

(கரு.) வெண்கொற்றக் குடைநிழலில் யானைமீது செல்லும் அரசரும் வறுமையுற்றுக் கால் நடையாக மற்றொரு தேசத்திற்குப் போக நேர்ந்தாலும் நேரும்.

43 சிறப்புஞ் செல்வமும் பெருமையும்உடையோ
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்[ர்

(பத.) சிறப்பும்-உயர்வும், செல்வமும்-பொருளும், பெருமையும்-மேன்மையும், உடையோர்-உடையவர், அறக்கூழ்ச்சாலை-தருமத்திற்காகக் கூழ்வார்க்கும் அன்னச் சாலையை, அடையினும்-சேர்ந்தாலும், அடைவர்-சேர்வர்.

(கரு.) உயர்வும், செல்வமும், மேன்மையும் உடையவர்கள் அவைகளை யிழந்து பசியினால் அவ்வூரிலுள்ள சத்திரங்களை அடைந்தாலும் அடைவார்கள்.

44 அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்

(பத) அறத்து - தருமத்திற்காக, இடு - இடுகின்ற, பிச்சை-பிச்சையை, கூவி-கூப்பிட்டு, இரப்போர்-யாசிக்கும் வறுமையோர், அரசோடு -அரண்மனையில், இருந்து-கூடியிருந்து, அரசாளினும்-அரசாட்சி புரிந்தாலும், ஆளுவர்-புரிவர்.

(கரு.) தெருவில் கூப்பிட்டுப் பிச்சை யெடுப்பவர் வறுமை நீங்கி அரசராகமாறி உலகத்தை ஆண்டாலும் ஆளக்கூடும்.

45 குன்றத் தனைஇரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்

(பத.) குன்று அத்தனை-மலையளவாக, இரு-சங்கநிதி பதுமநிதி என்னும் பெரிய, நிதியை-திரவியத்தை, படைத்தோர்-படைத்தவரும், அன்றைப் பகலே-(கிடைத்த) அந்தத் தினத்திலே, அழியினும்-கெட்டாலும், அழிவர்-கெடுவர்.

(கரு.) மலைபோன்ற அதிக திரவியத்தைப் பெற்றவர் பெற்ற அன்றேயும் இழந்து விடுவர்.

46 எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்ப்பா ழாகினு மாகும்

(பத.) எழு-ஏழு, நிலை-அடுக்கினையுடைய, மாடம்-மாளிகைகளும், கால் சாய்ந்து-அடியோடு சாய்ந்து, உக்கு-தொறுங்கி, கழுதை-கழுதைகள், மேய்-மேய்கின்ற, பாழ்-பாழ் நிலம், ஆயினும்-ஆனாலும், ஆகும்-ஆகும்.

(கரு.) அநேக அடுக்குகளையுடைய மாளிகைகளெல்லாம் இடிந்து விழுந்து கழுதை மேயும் பாழிடம் ஆனாலும் ஆகும்.

47 மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்துதங் கொழுநரைத்
உடுத்த ஆடை கோடி யாக [தழீஇ
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்

(பத.) மண அணி-மணத்திற்கு வேண்டியகோலத்தை, அணிந்த-பூண்ட, மகளிர்-பெண்கள், ஆங்கே - அப்பொழுதே, பிண அணி-(கணவர் இறந்ததனால்) பிணக்கோலம், அணிந்து - பூண்டு, தம் - தமது, கொழுநரை - கணவர்

உடம்பை, தழீஇ-தழுவி, உடுத்த-(முன்பு) உடுத்த, ஆடை-மணக்கூறையே, கோடி ஆக-அறுப்புக் கூறையாக, முடித்த கூந்தல்-பின்னிய கூந்தலே, விரிப்பினும்-விரித்தாலும், விரிப்பர்-விரிப்பார்.

(கரு.) மணக்கோலம் பூண்ட பெண்கள் அம்மணப்பந்தலிலேயேதங் கணவரைப் பிணக்கோலத்துடன் கண்டு அவரைத் தழுவித் தமது கூந்தலே விரித்து அழும்படி நேரிட்டாலும் நேரிடும்.

48 பெற்றமுங் கழுதையு மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்

(பத.) பெற்றமும்-மாடும், கழுதையும்-கழுதையும், மேய்ந்த-உலாவிய, அப்பாழ்-அந்தப் பாழ் நிலமானது, பொன் தொடி-பொன்னுலாகிய வளேயலே (அணிந்த), மகளிரும் - பெண்களேயும், மைந்தரும் - ஆடவர்களேயும், செறிந்து-நெருங்கி, நெல்பொலி-நெல்லினது குவியல்களேயுடைய, நெடுநகர்-பெரிய நகரமாக, ஆயினும்-ஆனாலும், ஆகும்-ஆகும்.

(கரு.) மாடுங் கழுதையும் மேயும் பாழ் நிலம் ஒரு காலத்தில் நல்ல நகரமாக மாறினும் மாறும்.

49 இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே

(பத.) இல்லோர்-(பொருள்) இல்லாதவர், இரப்பதும்-யாசிப்பதும், இயல்பே இயல்பே-இயற்கையே இயற்கையே.

(கரு.) பொருளில்லாதவர் இரத்தல் இயல்பு.

50 இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே

(பத) இரந்தோர்க்கு யாசிப்பவருக்கு, ஈவதும்-இல்லை என்னாது கொடுத்தலும், உடையோர்-பொருள் உடையோர், கடனே-கடமையே.

(கரு.) யாசகர்க்கு இல்லை என்று சொல்லாது கொடுக்கவேண்டியது பொருளுடையோர் கடமை.

51 நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்லில் லோர்க்கே

(பத.) நல்ல ஞாலமும்-நல்ல பூவுலகையும், வானமும்-தேவருலகையும், பெறினும்-பெற்றாலும், எல்லாம்-அவையெல்லாம், இல்-(நற்குண நற்செய்கையை யுடைய) மனைவியர், இல்லோர்க்கு-இல்லாதவர்க்கு, இல்லை-இல்லையாம். ஏ-அசை.

(கரு.) நல்ல மனைவி இல்லாதவர்க்கு மண்ணுலகிலும் விண்ணுலகிலும் சுகமில்லை.

52 தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே

(பத.) தறுகண்-அஞ்சாமையையுடைய, யானை தான்-யானையானது, பெரிது ஆயினும் - (எல்லாவற்றையும்விட உருவத்திற்) பெரிதாயினும், சிறுகண்-சிறியகணுக்களையுடைய, மூங்கில் கோற்கு-மூங்கில் கோலுக்கு, அஞ்சும்-பயப்படும்.

(கரு.) யானை உருவிற் பெரியதாயினும் சிறிய மூங்கிற் கொம்பிற்குப் பயப்படும்.

53 குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே

(பத.) குன்று உடை-மலைகளை உடைய, நெடுங்காடு ஊடே-நெடிய காட்டினிடத்தே, வாழினும்-வாழ்ந்தபோதும்

னும், புல்தலை-சிறிய தலையையுடைய, புல்வாய்-மானானது, புலிக்கு அஞ்சும்-புலிக்குப் பயப்படும். ஏ-அசை.

(கரு.) ஒரே காட்டில் வாழ்ந்தபோதிலும் மான் புலிக்கு அஞ்சும்.

54 ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகஅஞ் சும்மே

(பத.) ஆரை ஆம்-ஆரைப்பூண்டு இருக்கிற, பள்ளத்து ஊடே-பள்ளத்தினிடத்தே, வாழினும் - ஒன்றாய் வாழ்ந்தாலும், தேரை-தவளையானது, பாம்பிற்கு-பாம்புக்கு, மிக அஞ்சும் - மிகவும் பயப்படும். ஏ-அசை.

(கரு.) தவளையும் பாம்பும் ஒரே இடத்தில் வசித்தாலும் தவளை பாம்புக்கு அஞ்சியே வாழும்.

55 கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே

(பத.) கொடுங்கோல்-நீதியில்லாத, மன்னர்-அரசர்கள், வாழும்-வாழ்கின்ற, நாட்டின்-நாட்டைப் பார்க்கினும், கடும்புலி-கொடிய புலி, வாழும் காடு-வாழ்கின்ற காடானது, நன்று-நல்லது. ஏ-அசை.

(கரு.) நீதியாக அரசாட்சி புரியாத அரசனது நாட்டில் இருப்பதைவிட காட்டில் வாழ்வது நல்லது.

56 சான்றோ ரில்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே

(பத.) சான்றோர்-(கல்வி அறிவு ஒழுக்கங்களாற் சிறந்த) பெரியோர், இல்லா-இல்லாத, தொல்பதி - பழமையான நகரத்தில், இருத்தலின்-வாழ்வதைவிட, தேன்தேர்-தேனைத் தேடுகிற, குறவர் தேயம்-குறவருடைய மலை நாடு, நன்று-நல்லது. ஏ-அசை.

(கரு.) பெரியோரில்லாத நாட்டில் இருப்பதைக் காட்டிலும் குறவர் வசிக்கும் மலையில் வாழ்வது நல்லது.

57 காலையு மாலையு நான்மறை ஓதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே

(பத.) காலையும்-காலைப்பொழுதிலும், மாலையும்-மாலைப் பொழுதிலும், நான்மறை-நான்கு வேதங்களையும், ஓதா-ஓதாத, அந்தணர் என்போர்-பார்ப்பார் என்று சொல்லப் படுவோர், அனைவரும்-எல்லோரும், பதர் - பதராவர். ஏ-அசை.

(கரு.) வேதம் இருவேளையும் ஓதாத பார்ப்பான் பதருக்குச் சமானம்.

58 குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை இறைவனு மூர்க்கனும் பதரே

(பத.) குடி அலைத்து-குடிகளை வருத்தி, இரந்து-அளவுகடந்து பொருள் வாங்கி, வெங்கோலொடு நின்ற-கொடுங் கோலோடு கூடிநின்ற, முடியுடை-கிரீடத்தையுடைய, இறைவனும்-அரசனாகிய, மூர்க்கனும்-கொடியவனும், பதர்-(அரசருள்) பதராவான். ஏ-அசை.

(கரு.) குடிகளை வருத்தி அதிக வரிவாங்கி நீதியாக அரசாட்சி செய்யாத அரசனும் பதர்.

59 முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
அதன்பய னுண்ணு வணிகரும் பதரே [து

(பத.) முதல் உள-முதலாகவுள்ள, பண்டம்-பொருளை, கொண்டு-வைத்துக்கொண்டு, வாணிபம் செய்து-வியாபாரம் நடாத்தி, அதன் பயன்-அதனால் வரும் இலாபத்தை, உண்ணு-அநுபவியாத, வணிகரும்-வைசியரும், பதர்-பதராவர். ஏ-அசை.

(கரு.) முதலைவைத்து வியாபாரம்செய்து இலாபத்தை மாத்திரம் அநுபவியாத, வியாபாரி பதருக்குச் சமானம்.

60 வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே

(பத.) வித்தும்-வித்தையும், ஏரும்-உழுவதற்குரிய கலப்பையும் மாடும், உள ஆய் இருப்ப-அமைந்திருக்க, அங்கு-அவ்விடத்தில்) எய்த்து-சோர்ந்து, இருக்கும்-இருக்கின்ற, ஏழையும்-அறிவில்லாதவனும், பதர்-பதராவான். ஏ-அசை.

(கரு.) உழுது பயிரிடுவதற்குரிய கருவிகளெல்லாம் இருந்தும் இளைத்திருப்பவன் பதருக்குச் சமானம்.

61 தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவள் பாராப் பேதையும் பதரே

(பத,) தன் மனையாளை-தன் மனையாட்டியை, தாய் மனைக்கு-(அவளது) தாய் வீட்டிற்கு, அகற்றி - போக்கி, பின்பு-பின்னே, அவள் பாரா-அவளைப் பாராமலிருக்கிற, பேதையும்-அறிவில்லாதவனும், பதர்-பதராவான். ஏ-அசை.

(கரு.) மனைவியை அவள் தாய் வீட்டிற்கு அனுப்பிப் பின், போய் அவளைக் கவனிக்காமலிருக்கிறவனும் பதருக்குச் சமானம்.

52 தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்
பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே

(பத.) தன்மனையாளை - தன் மனையாட்டியை, தனி - தனியாக, மனை-வீட்டில், இருத்தி-இருக்க வைத்து, பிறன் மனைக்கு-அயலான் மனைவியிடத்து, ஏகும்-(விரும்பிப்) போகின்ற, பேதையும் - அறிவில்லாதவனும், பதர் - பதராவன், ஏ-அசை.

(கரு) கொண்ட பெண்ணை வீட்டில் தனியே வைத்து விட்டு அடுத்த வீடுசெல்பவனும் பதருக்குச் சமானம்.

63 தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே

(பத) தன் ஆயுதமும்-தன்னுடைய ஆயுதத்தையும், தன் கையில்-தன் கையில் உள்ள, பொருளும்-பொருளை யும், பிறன் கையில்-பிறனுடைய கையில், கொடுக்கும்-கொடுக்கின்ற, பேதையும்-அறிவில்லாதவனும், பதர்-பதர் ஆவான், ஏ-அசை.

(கரு) தன் ஆயுதத்தையும், தன் கையிலுள்ள பொரு ளையும் அயலானுக்குக் கொடுப்பவனும் பதருக்குச் சமா னம்.

64 வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்

(பத) வாய்-வாயே, பறை ஆகவும்-பறையாகவும், நா-நாவே, கடிப்பு ஆகவும்-அடிக்குந் தடியாகவும் (கொண்டு), சாற்றுவது - சொல்லுவது, ஒன்றை - ஒரு காரியத்தை, போற்றி-பாதுகாத்து, கேண்மின்-கேளுங்கள்.

(கரு) (மனத்தை வேறொன்றிற் செலுத்தாது) பாது காத்து, அறிவுடையோர் இடித்துச் சொல்லுமவற்றைச் செவிகொடுத்துக் கேளுங்கள்.

65 பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே

(பத) பொய் உடை-பொய்யை உடைய, ஒருவன்- ஒருமனிதன், சொல் வன்மையினால்-(பேசும்) வலிமையால்

மெய்போலும்-மெய்போலத் தோன்றும். மெய்போலும்-மெய்போலத் தோன்றும்.

(கரு) பொய் பேசுபவனது வாக்கு சாதுரியத்தால் பொய்யும் மெய்போலக் காணப்படும்.

66 மெய்யுடை ஒருவன் சொலமாட்டா மையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே [ல்

(பத) மெய்-உண்மையை, உடை-உடைய, ஒருவன்-ஒரு மனிதன், சொலமாட்டாமையால்-பேசும்வாக்கு வல்லமை யில்லாததனால், பொய்போலும் - அந்த உண்மை பொய் போலத் தோன்றும், பொய்போலும்-பொய் போலத் தோன்றும்.

(கரு) உண்மை பேசுபவனது சாமர்த்தியக் குறைவால் மெய்யும் பொய்போலக் காணப்படும்.

67 இருவர்தஞ் சொல்லையும் எழுதரங்கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகி நின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே

(பத) இருவர்தம்-இருகட்சியருடைய, சொல்லையும் - வார்த்தையையும், எழுதாம் கேட்டு-எழுமுறைகேட்டு, இருவரும்-(அந்த) இருகட்சியரும், பொருந்த-ஒத்துக்கொள்ள, மனுமுறை-மனுநூலின், நெறியின் - வழியால், உரையார் ஆயின்-(முடிபு) சொல்லாரானால், வழக்கு இழந்தவர் தாம்-வழக்கினை யிழந்தோர், மனம் - மனமானது, உற மறுகி நின்று-மிகவும் கலங்கிநின்று, அழுத-புலம்பிய, கண்ணீர்-கண்ணீரானது, முறைஉற-முறையாக, தேவர் மூவர்-(பிரம, விஷ்ணு, உருத்திரர்களாகிய) மூன்று தேவர்களும், காக்

கினும்-காத்தாலும், வழிவழி அவர்-சந்ததிகளை, ஈர்வது-அறுப்பதாகிய, ஓர்-ஒப்பற்ற, வாளாகும்-வாளாயுதமாகும். ஏ-அசை.

(கரு) ஒரு வழக்கில் நியாயந் தீர்ப்பவன் இருகட்சியாரையும் பலமுறை விசாரித்து நியாயஞ் சொல்ல வேண்டும்; அப்படி நியாயம் சொல்வதில் தவறினால், நியாயத்தை இழந்த கட்சிக்காரர் அழுத கண்ணீர் நியாயாதிபதி சந்ததியை அழித்துவிடும்.

68 பழியா வருவது மொழியா தொழிவது

(பத) பழி ஆ-(பின்பு) நிந்தையாக, வருவது-வருங் காரியத்தை, மொழியாது - பேசாமல், ஒழிவது-விடத்தகுவது.

(கரு) நிந்தையைத் தரும் காரியத்தைப்பற்றிப் பேசாதிருத்தல் நல்லது.

69 சுழியா வருபுன லிழியா தொழிவது

(பத) சுழியா-சுழித்து, வருபுனல் - வருகின்ற வெள்ளத்தில், இழியாது -. இறங்காது, ஒழிவது-விடத் தகுவது.

(கரு) சுழித்துவரும் வெள்ளத்தில் இறங்கப்படாது.

70 துணையோ டல்லது நெடுவழி போகேல்

(பத) துணையோடு அல்லது-துணைவனோடு அல்லாமல், நெடுவழி-தூரவழியில், போகேல்-செல்லாதே.

(கரு) நெடுந்தூரம் பயணம் செல்வதானால் துணையின்றிச் செல்லக்கூடாது.

71 புணைமீ தல்லது நெடும்புன லேகேல்

(பத) புணைமீது-தெப்பத்தின்மேல், அல்லது - அல்லாமல், நெடும்புனல் - ஆழமுள்ள பெரிய வெள்ளத்திலே, ஏகேல்-(நீந்திச்) செல்லாதே.

(கரு) பெரிய வெள்ளத்திலே தெப்பமின்றிச் செல்லக் கூடாது.

72 எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே

(பத) எழில் ஆர் முலை-அழகுபொருந்திய தனங்களை யும், வரிவிழியார் - வரிகள்பொருந்திய கண்களையுமுடைய மாதர்களது, தந்திரம்-உபாயங்களுள், இயலாதன-பொருந் தாதனவற்றை, கொடு - அங்கிகரித்துக்கொண்டு, முயல்வு - முயலுதல், ஆகாது-கூடாது. ஏ-அசை.

(கரு) மாதர்கள் சொல்லும் உபாயங்கள் அனைத்தை யும் அங்கிகரித்தல் கூடாது.

73 வழியே யேகுக வழியே மீளுக

(பத) வழியே - நல்ல வழியிலே, ஏகுக - செல்லுக, வழியே-நல்ல வழியிலே, மீளுக-திருமபுக.

(கரு) நல்லவழியிலே செல்லுக, நல்லவழியிலே திரும் புக.

74 இவைகா ணுலகிற் கியலாம் ஆறே

(பத) இவைகாண்-இவைதாம், உலகிற்கு-உலகில் உள் ளவர்க்கு, இயல் ஆம் - பின்பற்றவேண்டிய, ஆறு - நெறி களாம்.

(கரு) நல்லவழியில் நடக்கவேண்டிய உலகத்தவர்க்கு இந்நூலிற் கூறியவை எல்லாம் உரியவை.

75 வாழிய நலனே வாழிய நலனே

(பத) நலன்-எல்லா நன்மைகளும், வாழிய - வாழ்க, நலன்-எலலா நன்மைகளும், வாழிய-வாழ்க.

(கரு) நன்மைகளே வாழ்க என்பதாம்.

வெற்றிவேற்கை முற்றிற்று.

ஸ்ரீ மகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
Q. H. M. S. No. 333 C. 2000 15-2-47.

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு கொழும்பு

1 புராண இதிகாசங்கள்	ரூ	அ
ஸ்ரீ மஹாபாரதம் 4 வால்யம் படங்களுடன்	30	0
ஸ்ரீ மஹா கந்தபுராணவசனம்	10	0
ஸ்ரீமத் கம்பராமாயணவசனம்	10	0
ஸ்ரீமத் பாகவதவசனம்	10	0
மூவர் அடங்கன் முறை	15	0
அருணாசலபுராண உரை	5	0
விநாயகபுராணவசனம்	8	0
விநாயகர் தோத்திரக்கொத்து	1	8
பட்டினத்தார் பிரபந்த உரை	8	0
பட்டினத்தார் பாடல் உரை	4	0
ஷை மூலம்	0	6
தாயுமானவர் பாடல் மூலம்	1	8
ஷை கிளேஸ்	3	0
ஷை உரை	8	0
திருப்புகழ் 160 பாடல்	1	0
ஷை 200 பாடல்	1	8
சிவபராக்கிரமம்	4	0
சுப்பிரமணியபராக்கிரமம்	4	0
திருவாதவூரடிகள் புராணஉரை	4	0
விஷ்ணுபுராணவசனம்	8	0
ஸ்ரீ பகவத்கீதைவசனம்	5	0
திருவிளையாடற் புராணவசனம்	5	0
பெரிய புராணவசனம்	5	0
ஸ்ரீ மஹாபாரத ஆதிபர்வம்	5	0
,, விராடபர்வம்	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம்	12	0
ஷை திரட்டு	1	0
அபிராமி யந்தாதி	0	2

சரஸ்வதி புத்தகசாலே
175, செட்டியார் தெரு கொழும்பு

	ரு	அ
ஸ்தோத்ரத்திரட்டு	1	0
திருச்செந்தூர்பிள்ளைத்தமிழ்உரை	2	0
ஸ்ரீமத் கம்பராமாயண சுந்தரகாண்டம்வசனம்	2	0
ஸ்ரீமஹாபக்த விஜயம் 6பாகம்	15	0

2 கதை அம்மானை

விக்கிரமாதித்தன்கதை	5	0
பஞ்சபாண்டவர்வனவாசம்	2	0
தர்மர் அஸ்வமேதயாகம்	2	0
மதனகாமராசன்கதை	2	0
வைகுந்த அம்மானை	1	12
புவனேக் திரனம்மானை	1	12
புலந்திரன் தூது	1	12
காத்தவராயன்கதை	1	12
அபிமன்னன் சுந்தரிமாலை	1	12
நளச்சக்ரவர்த்திகதை	1	8
பவளக்கொடிமாலை	1	0
புலந்திரன்களவுமாலை	1	0
கிருஷ்ணன் தூது	1	0
கருடபுராணம்	1	0
ஆரவல்லி சூரவல்லி	1	0
தேசிங்குராசன்கதை	1	0
மயில்ராவணன்கதை	1	0
கான்சாகிபுசண்டை	1	0
கர்ணன்சண்டை	1	0
புரூரவச்சக்ரவர்த்திகதை	1	0
கோவிலன்கதை	1	0
சித்திரபுத்திரநயினார்கதை	1	0
மின்னொளியாள்குறம்	1	0

ஸரஸ்வதி புஸ்தகசாலை
175, செட்டியார் தெரு கொழும்பு

	ரூ	அ
மதுரை வீரசுவாமிகதை	1	0
கதிரேசன் ஆனந்தகளிப்பு	0	12
சிறுத்தொண்டன்கதை	0	12
ஏணியேற்றம்	0	12
திரௌபதைகுறம்	0	12
தமிழறியும் பெருமாள்கதை	0	12
வாலிமோட்சம்	0	12
புஷ்பலீலாவதி கதை	1	8
பூலோகரம்பைகதை	1	12
3 சோதிடம்		
சுகர்நாடிஎன்னும் சோதிடசிகாமணி	8	0
சப்தரிஷிவாக்கியம்	8	0
சாதகாலங்காரம்உரை	5	0
சோதிடக்களஞ்சியஉரை	5	0
குமாரசாமிய உரை	3	0
சோதிடச்சில்லறைக்கோர்வை	4	0
சங்கராசாரியார் ஆயுட்பாகம்	2	0
அகஸ்தியர் பஞ்சபக்ஷிஉரை	2	0
உரோமரிஷி விருடிபஞ்சபக்ஷி	1	0
ஷை உரை	3	0
சந்திரகாவியஉரை	0	8
மழைக்குறிசாஸ்திரம்	0	10
கணேச ஆரூடதீபிகை	1	8
தொடுகுறிசாஸ்திரம்	0	3
கௌளிசாஸ்திரம்	0	3
மரணகண்டி சோதிடம்	0	12
சகலகனவின் பலன்	0	4
சிற்பசிந்தாமணி பெரிது	5	0

	ரூ	அ
சூடாமணி உள்ளமுடையான்	1	8
பாலகிரகதோஷம்	0	3
நவக்கிரக பூஜாவிதி	0	6
போகர்பஞ்சபக்ஷி	2	0
விமேசுரஉள்ள முடையான்உரை	1	8
வீமகவி உரையுடன்	1	8
தாண்டவமாலை உரையுடன்	0	12
தினசரிகோசரபோதினி	0	12
ஜாதகப்பலன் விளக்கம்	0	8
சோதிட ஆசிரியன் 4பாகம்	5	0
சோதிட வினாவிடை	4	8

4 வைத்தியம்

அனுபோகவைத்யம் 8காண்டம்	10	0
போகர் 7000	10	0
ஆத்மரக்ஷா மிர்தவைத்தியசாரசங்கிரகம்	5	0
வைத்திய மூலிகை அகராதி	2	0
18 சித்தர் நாடி சாஸ்திரம்	2	0
கண்ணுச்சாமியம் என்னும்வைத்தியசேகரம்	2	8
சிகிச்சாரத்னதீபம் முதற்பாகம்	7	0
ஷை 2ம்பாகம் வைத்திய சிந்தாமணி	5	0
கைமுறைபாக்கட் வைத்தியம்	1	8
ஷை செய்முறை	1	8
மருத்துவசாஸ்திரம் படங்களுடன்	5	0
ஸ்திரீபால சிகிச்சை	5	0
இங்கிலீஷ் தமிழ் வைத்யசிகாமணி	5	0
விஷவைத்திய சிந்தாமணி	2	0
வைத்தியக்குறள்	1	8
ஞானவெட்டி மூலம்	2	0
ஷை உரையுடன்	5	0
பதார்த்தகுண விளக்கம் 1ம்பாகம்	9	0
ஷை 2ம்பாகம்	6	0

	ரூ	
பதார்த்தகுண சிந்தாமணி	3	0
ஆனுனிபதார்த்தகுண விளக்கம்	3	0
18 சித்தர்வைத்திய சில்லறைக்கோவை	5	0
மாட்டு வைத்தியம் 3பாகம்	4	0
மாட்டு வாகடம்	1	8
மணிமந்திரவைத்திய சேகரம்	2	0
அகஸ்தி பாலவாகடத்திரட்டு	1	8
ஆயுள்வேதச் சுருக்கம்	1	0
மூலிகைமர்மம் 4பாகம்	5	0
ஹிந்துபாலவைத்திய போதினி	1	0

5 இன்பநூல்கள்

கொக்கோகலீலை	0	8
கொக்கோகபக்குவம்	1	4
கொக்கோக மர்மம்	1	8
கொக்கோக நுட்பம்	1	8
கொக்கோக சாரம்	1	8
முத்தத்தின் பக்குவம்	1	4
கொக்கோக வைபோகம்	1	4
கொக்கோக இன்பலீலை	2	0
பழையகொக்கோகம்	3	0

6 அகராதி நிகண்டு

சூடாமணி நிகண்டு 12 தொகுதி	5	0
மதுரைத்தமிழ்ப் பேரகராதி	20	0
ஜூபிலித்தமிழ் அகராதி	18	0
இங்கிலிஷ் இங்கிலிஷ் தமிழ் அகராதி பெரிது	15	0
ஷை சிறிது	5	0
வீரமாமுனிவர் சதுரகராதி	5	0
தற்காலத்தமிழ்ச் சொல்லகராதி	3	0
கழகத்தமிழ்க்கையகராதி	2	0

7 ஜாலம் மாந்திரிகம்

மாந்திரீக அரிச்சுவடி	0	5
மாந்திரீக ரத்னகாரம்	2	0

	ரூ	அ
கந்தரனுபூதி சக்கரம்	0	8
சடாக்ஷரவிஞ்சை	0	6
வாராகிமாலை சக்கரத்துடன்	0	8
பாலகிரக தோஷம்	0	3
விநோத ஜாலக்கண்ணுடி	0	10
பீதாம்பரஐயர் ஜாலம்	3	0
கண்கட்டு வித்தைகள்	4	0
சத்துரு சங்காரம்	1	8

8 இஸ்லாம் மார்க்க புத்தகங்கள்

	ரூ	அ
சீறாப்புராணம் கவி	6	0
இரவுஸ்கால்படைப்போர்	3	8
மஸ்தான்சாகிபு பாடல்மூலம்	2	0
ஷை உரையுடன்	6	0
ஐந்துபடைப்போர்	1	8
இரத்தின விலாசம்	1	8
சார்கர்வேஸ்கதை	1	8
இராஜமணிமாலை	1	8
முகிதீன்மாலை	1	0
இரத்தினமுகம்மது காரணசரித்ரம்	0	12
பப்பாத்தி அம்மானை	0	12
ஷம்மூன் கிஸ்ஸா	0	12
நசீஹத்துல் இஸ்லாம ஷாபி	0	12
ஷை ஹனி	0	12
காசிம் திருப்புகழ்	0	12
ஹம்சாலெப்பை பதம்	1	8
சத்துருசங்காரம்	1	8
நமியவதார அம்மானை	0	4
தொழுகையடவு	0	4
சலவாத்துப்பாட்டு	0	4
பெண்புத்திமாலை	0	4
காசிம்படைப்போர்	0	4
சக்கராத்து நாமா	0	4

	ரூ	அ
நசீது நாமா	0	4
தீதா றுமாலை	0	6
ஞானமணிமாலை	0	6
சைத்துன் கிஸ்ஸா	1	0
குறமாது	1	0
மஹரிபத்து மாலை	1	0
மரணவிலக்கம்	0	6

9 இலேசாக ஆங்கிலம் கற்கும் நூல்கள்

ஆங்கில சுயபோதினி	1	0
ஆங்கில ஆசான்	5	0
இங்கிலீஷ் தமிழ் ஒக்கபிளேரி	0	4
இங்கிலீஷ் தமிழ் பிரைமர்	0	3

10 பாட்டுப்புஸ்தகங்கள்

நடராசப்பத்து, கெருடப்பத்து, அருணசலேசுரர்பதிகம், மாதப்பதிகம், சுப்பிரமணியர் விருத்தம், ஆறுமுகசாமிவிருத்தம், காமாட்சியம்மன் விருத்தம்- வடிவுடையம்மன் ஆசிரியவிருத்தம், வேமனுனந்த சுவாமி பதிகம், இராமர்தோத்திரம், திருநாமப் பதிகம், சூரியநமஸ்காரப்பதிகம், மாரியம்மன் விருத்தம், குதம்பைச் சித்தர்பாடல், அழுகனிச்சித்தர்பாடல், தலைவிதிக்கீர்த்தனை முதலியன ஒன்று 0 1

20 கில்லரைக் கோர்வை	1	0
200 சில்லரைக் கோர்வை	5	0
ஞானக் கோர்வை	5	0

11 பலவிதபுஸ்தகங்கள்

விநோதரசமஞ்சரி கிளேஸ்	5	0
டைப்	3	0

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு கொழும்பு

	ரூ	அ
தனிப்பாடற்றிரட்டு மூலம்	2	0
ஷை உரை 2பாகம்	10	0
விவேகசிந்தாமணி உரை	0	6
நாலுபாஷை ஓக்கபிளேரி	0	12
நாரதர் கலகம் 4பாகம்	4	0
விடுகவிக்களஞ்சியம் பெரியது	0	8
ஷை சிறிது	0	2
கோலப்புஸ்தகம்	0	6

12 சினிமாப்பாட்டுகள்

அசோக் குமார்
அம்பிகாபதி
ஆர்யமாலா
சகுந்தலா
சாவித்திரி
அரிச்சந்திரா
சிந்தாமணி
லவங்கி
மங்கம்மாசபதம்
வனமோஹனி
ஜகதலப்பிரதாபன்
கண்ணகி
ஸ்ரீ வள்ளி
திருநீலகண்டர்
மீரா
பிரபாவதி
பூம்பாவை
ஹரிதாஸ்
மைனர்ராஜாமணி
ராஜேஸ்வரி

இன்னும் அநேக சினிமாப் பாட்டுப் புஸ்தகங்கள் உண்டு ஒன்றுக்கு விலை அணா2 16சினிமாப்புஸ்தகங்களடங்கிய, சினிமாகீதக் கோர்வை பாகம்ஒன்றுக்கு விலை ரூபா 1—0—0

இன்னும் பலவிதமான புஸ்தகங்கள் எப்போதும் விற்பனைக்குத்தயாராய் இருக்கின்றன

உள்ளூரவர்கள் நேரிலும் வெளியூரவர்கள் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

காகிதப் பஞ்சம் காரணமாக புஸ்தக விலைகள் கூடியிருப்பதோடு சில புஸ்தகங்கள் அச்சிடாமலும் இருக்கிறது காலக்கிரமத்தில் விலைகள் குறைவதோடு சகலபுஸ்தகங்களும் அச்சிட்டு விற்பனைக்குவந்துவிடும்

நீதி நூற் கொத்து

முதற்பாகம்

1. ஆத்தி சூடி
2. கொன்றை வேந்தன்
3. உலகநீதி
4. வெற்றிவேற்கை
5. வாக்குண்டாம்
6. நல்வழி
7. நன்னெறி

இவ்வேழு நீதிநூல்களும் உரையுடன் அழகிய பைண்ட் செய்யப்பெற்றது

விலை ரூபா 1 0 0

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு
கொழும்பு